LIBRARY
29 DEC 1964

THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

Wednesday, 22nd July 1964

The House met in the Assembly Chamber, Fort St. George, at half-past eight of the clock MR. SPEAKER (THE HON. SRI S. CHELLAPANDIAN) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS

STARRED QUESTIONS.

திருப்பத்தூரிலுள்ள கால்வாய்

* 611 கேள்வி.—திரு. து. ப. அழகமுத்து : கனம் பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம் திருப்பத்தூர் வட்டத்தில் உள்ள "மாணிக்கம் கால்வாய்" அரசாங்கத்தாரால் வெட்டப் பட்டதா ?

(இ) அப்படியானால் என்ன செலவில் வெட்டப்பட்டது ?

(உ) இந்த கால்வாய்க்கு இப் பெயர் யார் வைத்தது ?

(எ) எந்த ஆற்றுத் தண்ணீர் இந்தக் கால்வாய் மூலம் பாய் கிறது ?

THE HON. SRI V. RAMAIAH : (அ) The canal referred to was dug in the year 1959–60 by the villagers of Vidavanpatti, Aralikotti, Ammachipatti and Poolathakurichi villages. In the year 1960–61, the Government took up improvements to the canal by widening and deepening it and by constructing sluices and cross drainage works.

(இ) An amount of Rs. 74,760 was spent by Government for the improvements carried out to the canal. The value of the work done voluntarily by the villagers is approximately Rs. 1,500.

(உ) The Government have no information as to how the canal came to be known as Manickam canal. The name is not to be found in the Revenue records.

(எ) The canal receives water from Periar river through the Nedungundu kanmoi in Melur taluk of Madurai district.

திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்கள் இந்தப் பெயர் எப்படி வந்தது என்று சர்க்காருக்குத் தெரியாது என்று சொல்கிறார்கள், சர்க்கார் இலாகாவினரால் எழுதப்பட்ட பெயர்ப் பலகை அங்கே இருக்கிறது. ஆர்.டி.ஓ. ஆபீஸ் ரெக்கார்டில் இருக்கிறதா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : "The name is not to be found in the Revenue records" என்று முதல் கேள்விக்குப் பதில் சொல்லியிருக்கிறேன்.

[22nd July 1964

திரு. செ. மாதவன் : அந்தப் பகுதி முன்னுள் காங்கிரஸ் சட்ட மன்ற உறுப்பினர் அவர்களுடைய பெயர் அது. அதை அந்தக் காலவாய்க்கு வைக்க வேண்டுமென்று அதிகாரிகளுக்கு உத்தர விடப்பட்டதா ?

கனம் திரு. வெ. ராமையயா : சர்க்கார் சம்பந்தமான ரெக்கார்டு களில் இந்தப் பெயர் இல்லையென்று சொன்னேன.

திரு. அ. ப. தர்மலிங்கம் : சர்க்கார் செலவில் வெட்டப்பட்ட இந்த வாய்க்காலுக்கு தனிப்பட்டவர் பெயர் வைக்க வேண்டிய காரணம் என்ன ?

கனம் திரு. வெ. ராமையயா : கனம் அங்கத்தினர் இந்த வேலை எவ்வாறு தொடங்கி நிறைவேற்றப்பட்டது என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும். இந்த வேலை பொது மக்களுடைய ஒத்துழைப் பைக் கொண்டே தான் முதலில் துவங்கப்பட்டது. அவாகள் செய்த வேலையைச் சரி செய்வதற்காக பின்னர் தான் அரசாங்கம் தலை யிட்டது. இதற்கு தனிப்பட்டவாகளுடைய பெயரை அரசாஙகம் வைக்கவேண்டுமெனறு ஒன்றும் செயயவில்லை. ஆயினும் இந்தக் காலவாய்க்கு மாணிக்கம் காலவாய் என்று பெயர் ஏற்பட்டதற்குக் காரணமாக ஒரு கருத்து நிலவுகிறது. அந்த இடத்தில் தணணீர் ஓடி அவாகள கண்டது கிடையாது. பெரியாரிலிருந்து அங்கே தணணீர்விடப்பட்டு ஓடியபோது சலசலவென்று அநதத் தண்ணீர் மாணிக்கம் மாதிரி இருந்ததாம். அதனால மாணிக்கம் கால்வாய் எனறு பெயர்.

திரு. கேஆர். ஆர்எம். கரியமாணிக்கம் அம்பலம் : இந்தக் கால வாய் வெட்டப்பட்ட பின் அந்தப் பகுதி பிரயோசனம் அடைந் திருக்கிறதா ? எத்தனை ஏக்கரா பாசனம் அதன்மூலம் கிட்டியிருக் கிறது. இப்போதும் அந்தக் கால்வாயினல் பிரயோசனம் இருநது கொண்டிருக்கிறதா ?

கனம் திரு. வெ. ராமையயா : இந்தக் கேள்விக்கு நேரிடையாகப் பதில் சொல்லாவிட்டாலும் நான் தெரிந்துகொண்ட வரையில் மழை பெய்யக்கூடிய காலத்தில் தண்ணீர் வருவதனல் இது மிகவும் பயன்படுகிறது. விவசாய அபிவிருததிக்கு இதனல் ஓரளவுக்கு பயன் ஏற்பட்டே வருகிறது.

திரு. செ. மாதவன் : கனம் அமைச்சர் அவர்கள் ரெவின்யூ ரெக்கார்டில் இந்தப் பெயரே இல்லையென்று சொன்னார்கள். அப்படி யானல நான் "மாணிக்கம் கால்வாய்" என்று பெயர் குறிப்பிட்டுக் கேட்ட கேள்விக்கு அது இந்தக் கால்வாயைப் பற்றியது தான் என்று தெரிந்து எவ்வாறு பதில் சொன்னார்கள்.

கனம் திரு. வெ. ராமையயா : இராமநாதபுரம் மாவட்டம், திருப்பத்தூர் வட்டம் என்று குறிப்பிடப்பட்டு இருந்ததால் கொஞ்சம் ஆராய்ச்சி பண்ணி இந்தக் கால்வாயாகத்தான் இருக்கும் என்று சொன்னேன். இந்தப் பெயர் ரெவின்யூ ரெக்கார்டில் இல்லாமல் இருப்பதையும் அப்போது தான் கண்டு பிடிக்கப் பட்டது.

22nd July 1964]

கனம் சபாநாயகர் : கனம் அங்கத்தினர் "மாணிக்கம் கால்வாய்" என்று எப்படிக் கேள்வி போட்டார்கள்?

THE HON. SRI R. VENKATARAMAN : The Hon. Speaker is cross-examining.

திரு. பி. கே. மூக்கையா தேவர் : இந்தக் கால்வாயில் தண்ணீர் வந்தபோது மாணிக்கமாக இருந்தது. அதனால் மாணிக்கம் கால்வாய் என்று பெயரிட்டார்கள் என்று சொன்னார்கள். உண்மையில் தண்ணீர் கரிய மாணிக்கமாக வருவதனால் கரிய மாணிக்கம் என்ற பெயர் வைக்க உத்தேசம் உண்டா?

வெற்றிலை பயிரிடுவோருக்கு உதவி

* 612 கேள்வி.—திரு. சி. ம. அம்பிகாபதி : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வெற்றிலை பயிரிடும் விவசாயிகளுக்கு சேதம் விளையாதிருக்கவும் நல்ல பலன் கிடைக்கவும் அரசாங்கம் என்ன உதவி புரிகிறது?

(இ) கடன் உதவிகள் செய்திருந்தால் விவரமென்ன?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) இம் மாநிலத்தின் பல்வேறு பாகங்களில் வெற்றிலைக்கொடிக்கால் நோய்களைத் தடுப்பதற்காகத் தக்க முறைகளை வகுக்கும்பொருட்டு, வெற்றிலைக் கொடிக்கால் நோய் பற்றிய ஆராய்ச்சி குறித்த இணைந்த திட்டம் ஒன்றுக்கு அரசாங்கம் அனுமதியளித்துள்ளது.

(இ) தஞ்சாவூர், தென்னாற்காடு மாவட்டங்களிலும் 1963-ம் ஆண்டு அக்டோபர் மாதம் புயற் காற்றாலும், பெருமழையாலும் (வெற்றிலைக் கொடிக்கால் குத்தகைக்கு எடுத்துக்கொண்டவர்கள் உட்பட வெற்றிலை பயிரிடுவோர் பாதிக்கப்பட்டனர். அவர்களுக்கு அரசாங்கம் ஒரு எக்கருக்கு ரூபாய் 500 வீதம் கடன் வழங்க அனுமதி வழங்கியது.

(*a*) The Government have sanctioned a co-ordinated scheme for the investigation of betelvine wilt diseases to evolve control measures for the disease in the various parts of the State.

(*b*) The Government sanctioned the grant of a loan of Rs. 500 per acre to the betelvine growers (including the lessees of the betelvines) who were affected by the cyclone and heavy rains in October 1963, in Thanjavur and South Arcot districts.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : எக்கர் ஒன்றுக்கு 500 ரூபாய் கொடுக்கப்படுகிற கடனில் சர்க்கார் மானியம் ஏதாவது இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : பாதிக்கப்பட்டவர்களுக்கு சப்ஸிடியாகவும் கொடுத்திருக்கிறார்கள். 1,200 குடும்பங்களுக்கு 40 ரூபாய் வீதம் 4,800 ரூபாய் கொடுத்திருக்கிறார்கள். 98 எக்கராவுக்கு நூறு ரூபாய் வீதம் 9,800 ரூபாய் கொடுத்திருக்கிறார்கள்.